<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>

<u>OS.192/2023</u>

<u>நாள்.04.02.2026</u>

**<u>வா.சா.1. 6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எனது தகப்பனார் கோவிந்தராஜ் அவர்களுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் வைரம். இரண்டாவது மனைவி பெயர் இராமமிர்தம். முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் வாதியாகிய நான், இரண்டாம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதி. 2வது மனைவியின் குழந்தைகள் தான் 6ம் பிரதிவாதி மற்றும் 7ம் பிரதிவாதி. எனது தகப்பனார் கோவிந்தராஜ் அவர்களுக்கு தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் மட்டும் உள்ளதால் வேறு சொத்துக்கள் ஏதும் உள்ளதா என்றால் எனக்கு தெரிந்தவரையில் உள்ள தாவா சொத்துக்களை மட்டும் வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். எனக்கு 1987ம் ஆண்டு திருமணம் ஆகியது. எனது மூத்த சகோதரி கலைச்செல்விக்கு எனக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது. கோவிந்தராஜீக்கும், 5ம் பிரதிவாதி இராமமிர்தத்திற்கும் எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. எனக்கு 5, 6 வயது இருக்கும்போது எனது வீட்டில் இருந்தார்கள். அவர்கள் திருமணம் செய்து கொண்டு இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. எனது தாயார் வைரம் அவர்களினுடைய தகப்பனார் ஊர் பெருவிடைமருதுார். எனது தாயார் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. அவருடன் எனக்கு சுமூகமான உறவு இல்லை. நான், எனது தாயாரை ஒரு இறப்பு நிகழ்வில் கடந்த 6 வருடத்திற்கு முன்பு பார்த்துள்ளேன். நான், எனது தாயாரிடம் போன் மூலமாக தான்

பேசினேன். எனது சகோதர, சகோதரிகளான 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் நெருக்கமான உறவுமுறை வைத்துக்கொள்வது கிடையாது. பார்க்கும் போது பேசுவேன். நான் சென்னையில் இருப்பதால் எனது சின்னம்மாவான இராமமிர்தம் மற்றும் அவரது பிள்ளைகளை சந்தித்து பேசுவது கிடையாது. தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதிற்குரிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அந்த ஆவணங்களை எடுத்து வைத்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 5ம் பிரதிவாதி இராமமிர்தம், 6, 7 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் உள்ளிட்ட கோவிந்தராஜீக்கு சொந்தமான சொத்துக்களை எவ்வாறு பிரித்துக்கொள்வது என்று கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பேசி எழுதிக்கொள்ளப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் சிறு வயதாக இருக்கும்போதே எங்களை விட்டுவிட்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. எங்களது வீட்டிலேயே சார்பில் குடியிருந்தார். எங்களது திருமணத்திற்கு அச்சடிக்கப்பட்ட திருமணப்பத்திரிக்கை எதையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. 03.10.1987–ல் கிராமத்தில் பேசி முடிக்கப்பட்ட எழுதிக்கொள்ளப்பட்ட பாக ஒழுகு பத்திரப்படி சொத்துக்கள் பிரிக்கப்பட்டு அவரவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு அவரவர்கள் தனித்த அனுபவத்தில் சொத்தினை வைத்துள்ளார்கள் என்றும், இந்த வழக்கிற்காக அவ்வாறு பாக ஒழுகு பத்திரம் ஏற்படவில்லை என்று தவறாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாக ஒழுகு பத்திரப்படி 3ம் பிரதிவாதி மலர்க்கொடிக்கு கிடைத்த சொத்தினை 5ம் பிரதிவாதி இராமமிர்தத்திற்கும், 1ம் பிரதிவாதி வைரத்திற்கு கிடைத்த சொத்தினை 5ம் பிரதிவாதி இராமமிர்தத்திற்கு கிடைத்த சொத்தினையும் பரிவர்த்தனை செய்து கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே போல் 1ம் பிரதிவாதி வைரத்திற்கு கிடைத்த சொத்தை 3ம் பிரதிவாதி மலர்கொடியிடம் ஒப்படைத்து விட்டார் என்றும், அந்த சொத்தினை சண்முகசுந்தரம் அவர்கள் மனைவி வடுவம்மாள் என்பவரிடம் விற்பனை செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விற்பனை செய்தது சம்பந்தமாகவும், பிழை திருத்தம் ஏற்பட்டது சம்பந்தமாகவும் எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதற்கு 6ம் பிரதிவாதி பதில் கொடுத்தாரா என்றால் கொடுத்துள்ளார். அந்த பதில் அறிவிப்பிற்கு மறு அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை. நான் இந்த வழக்கை பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். திருத்துறைப்பூண்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 76/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சமூக நீதிமன்றத்தில் இந்த அசல் வழக்கை தாக்கல் செய்ததற்கு பின்னால் திருத்துறைப்பூண்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களும், திருத்துறைப்பூண்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் உள்ள சொத்துக்களும் ஒரே சொத்துக்கள் என்றால் சரியல்ல.

**<u>6ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.